# தானியேலைப் போல நாம் தேவனை நோக்கி நடக்கிறோம்

சிறுவர்களுக்கு போதிப்பவர்கள் P6b யை வாசிக்கவும்.

**ஜெபம்:** "பரலோகத் தந்தையே, உம்மைத் தேடவும், எங்களுக்குத் தேவையான எல்லாவற்றையும் குறித்து எப்போதும் உம்மிடம் பேசவும் உமது மந்தைக்கு வழிகாட்ட எனக்கு ஞானத்தையும் விசுவாசத்தையும் தயைகூர்ந்து கொடுப்பீராக."

1. **விசுவாசத்தோடு ஜெபிக்க உங்கள் மந்தைக்கு வழிகாட்டும்படியாக உங்கள் இருதயத்தை ஆயத்தப்படுத்துக.**


தானியேல்

கீழ்க்காணும் விசுவாசிகள், ஒவ்வொருவரும் தேவனிடம் ஜெபித்த முறையில் காணப்படும் சில வித்தியாசங்களை வேதாகமத்தில் கண்டு எழுதுக.

சாலொமோன், 2 நாளா. 6:12-17.

யாபேஸ், 1 நாளா. 4:9 & 10.

அன்னா, 1 சாமு. 1:9-13.

தாவீது, 2 சாமு. 7:18-22.

தானியேல், தானியேல் 9:3-19.

கிறிஸ்தவர்கள், அப். 4:24-30.

**குறிப்பு:** நாம் நின்றும், அமர்ந்தும், முழங்காலிட்டும், விழுந்து கிடந்தும், குரலெழுப்பியும் அமைதியாகவும் தேவனிடம் ஜெபிக்கலாம்.

எப்படி நாம் ஜெபிக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் என்பதை வேதாகமத்தில் காண்க.

- இரகசியமாக, மத். 6:5-8. குறிப்பு: கிறிஸ்தவர்களாகிய நாம் எப்போதும் தேவனால் பார்க்கப்படவும் கேட்கப்படவுமே ஜெபிக்க வேண்டுமே தவிர பிற மக்கள் பார்க்க வேண்டும் கேட்க வேண்டும் என்பதற்காக ஜெபிக்கக் கூடாது .
- பிறரை மன்னித்து, மத். 6:9-15: குறிப்பு: கிறிஸ்தவர்களாகிய நாம் பல தவறுகளையும் பாவங்களையும் செய்வதால், தேவனிடம் மன்னிப்பைப் பெற வேண்டியவர்களாய் இருக்கிறோம். ஆனால் நமக்கு கேடு செய்தவர்களை நாம் மன்னிக்கும் போதே தேவன் நம்மை மன்னிக்கிறார்.
- மனம் திரும்பி, லூக். 18:10-14: குறிப்பு: தேவன் பதில் அளிக்கும் படியாக நம்மில் ஒருவருமே நல்லவர்கள் அல்ல. எனவே நாம் ஜெபிக்கும் போது நமது தவறுகளை ஒப்புக்கொள்ள வேண்டும். நாம் எவ்வளவு நல்லவர்கள் என்று நம்மை நாமே நினைத்துக் கொண்டு தற்புகழ்ச்சி செய்து திரியக் கூடாது.
- கீழ்ப்படிதலுள்ள மனைவியாகவும் சாந்தமுள்ள கணவர்களாகவும், 1 பேதுரு 3:1-9: குறிப்பு: நாம் நமது வாழ்க்கைத் துணையை எவ்வாறு நடத்துகிறோமோ அவ்வாறே நமது பரலோகத் தந்தையும் நம்மை நடத்துவார்.
- நன்றியோடு, 1 தெச. 5:16-18. குறிப்பு: தேவன் எப்போதும் நல்லவராய் இருக்கிறார். எப்போதும், உண்மையான ஜெபத்துக்குப் பதிலளிக்கிறார். அது நமக்கு நன்மை பயக்கும் வண்ணமாகவே இருக்கும்.

கிறிஸ்தவர்களின் ஜெபம் பிற மதத்தவரின் ஜெபத்தில் இருந்து எவ்வாறு மாறுபடுகிறது என்பதை வேதாகமத்தில் **காண்க:**

- இயேசுவின் நாமத்தை உபயோகித்து, யோவான் 15:16; 16:24
- பரிசுத்த ஆவியினால், யூதா 20 & 21
- தேவனை "பிதாவே" என்று அழைத்தல், மத். 6:9



விசுவாசிகள் தம்மிடம் கேட்கும்படியாக தேவன் விரும்பும் சிலவற்றை கீழ்வரும் வேதவசனங்களில் கண்டு எழுதுக:

மத். 6:9-13

அப். 4:27-30

எபே. 1:15-20

யாக்கோபு 1:2-5

யாக்கோபு 5:13-16

**தானியேல் 6 ஐ வாசித்து அறிந்து எழுதுக:**

- வசனங்கள் 6:1-4 ல்: தரியு இராஜாவின் அதிகாரிகள் தானியேலைக் குறித்து ஏன் பொறாமைப்பட்டார்கள்.
- வசனங்கள் 5-9 ல்: தானியேலைக் கொல்ல அதிகாரிகளின் தீய திட்டம்.
- வசனங்கள் 10-11 ல் : அவர்கள் திட்டத்தைக் கேள்விப்பட்ட போது தானியேல் என்ன செய்தான்?
- வசனங்கள் 12-15 ல்: தீய மனிதர்கள் எவ்வாறு இராஜாவைத் தங்கள் திட்டத்துக்கு ஒத்துக்கொள்ள வைத்தனர்ண.:
- வசனங்கள் 16-22 ல்: தானியேலைக் காக்க தேவன் என்ன செய்தார்?
- வசனங்கள் 23-24 ல்: தரியு இராஜா தீய மனிதர்களுக்கு என்ன செய்தான்?
- வசனங்கள் 25-28 ல்: தேவனை மகிமைப் படுத்தத் தரியு இராஜா என்ன செய்தான்?



**சிங்கங்களின் மத்தியில் தானியேல்**

**2. வரும் வார செயல்பாடுகளுக்காக உங்கள் உடன் ஊழியர்களுடன் திட்டமிடவும்**

தேவைகளில் இருக்கும் உறுப்பினர்களை சந்தித்து ஜெபிக்க ஏற்பாடு செய்யவும்.

கிறிஸ்தவர்களே இல்லாத அல்லது ஒரு சில கிறிஸ்தவர்களே இருக்கும் பகுதிகள் வழியாக நடந்து சென்று மக்களுக்காக ஜெபிக்கவும். அவர்களை ஆசீர்வதிக்கும்படி தேவனிடம் வேண்டுங்கள். சுவிசேஷத்தை விசுவாசிக்க ஆயத்தமாய் இருக்கும் வீடுகளைக் காட்டுமாறு ஜெபிக்கவும்.

குடும்பமாகவும், தனியாகவும் ஜெபிப்பது எப்படி என்று புதிய விசுவாசிகளை சந்தித்து **விளக்கவும்.**

## 3. வரும் ஆராதனை வேளைக்காக உங்கள் உடன் ஊழியர்களுடன் ஜெபியுங்கள்.

தற்போதைய தேவைகளுக்கும் அந்தந்தப் பகுதி பழக்கவழக்கங்களுக்கும் ஏற்ற நடவடிக்கைகளைத் தேர்ந்து எடுக்கவும்.

தானியேல் ஆறாம் அதிகாரத்தில் இருந்து தானியேலின் கதையைக் கூறவும் அல்லது நடித்துக் காட்டவும்.

பகுதி 1 ல் நீங்கள் அறிந்து கொண்டதைப் பற்றி கேள்விகள் கேட்கலாம்.

குழந்தைகள் தாங்கள் தயாரித்த நாடகம், கவிதை மற்றும் கேள்விகளை வழங்கலாம்.

மத்தேயு 6:9-13 ல் இயேசு கற்பித்த ஜெபத்தை யாவரும் சேர்ந்து சபையாக ஒப்புவிக்கட்டும்.

பகுதி 1 ல் உள்ளது போன்ற வேத பாடங்களை விளக்கி, ஜெபிக்கும்படியாக மந்தைக்கு போதிக்கவும். மந்தை தாங்களுக்கு தேவைப்பட்டவற்றிற்காக ஜெபிக்குமாறு வழிநடத்தவும்.

தனியாகவும் குடும்பமாகவும் ஜெபிக்கும்படியாக விசுவாசிகளை ஊக்கப்படுத்துங்கள்.

1 தெச. 5:17 மனப்பாடம் செய்க. "இடைவிடாது ஜெபியுங்கள்."

அக்காலத்தில் தேவ பிரமாணம் விலக்கிய உணவை விட சிறந்த உணவை எவ்வாறு தானியேலின் மூன்று நண்பர்கள் தெரிந்து கொண்டனர் என்பதைத் தானியேல் ஒன்றாம் அதிகாரத்தில் இருந்து கூறி, கர்த்தரின் பந்தியை ஆசரிக்கவும். கர்த்தரின் பந்தியில் நாம் எல்லாவற்றையும் விட சிறந்ததை உண்ணுகிறோம் என்பதை விளக்கவும்.

இயேசுவின் இரத்தம் எல்லா பாவத்தில் இருந்தும் நம்மை சுத்திகரிப்பதால், ஜீவ அப்பமாகிய அவரை நமக்குத் தந்த தேவனுக்கு நாம் நன்றி செலுத்தி ஜெபிப்போம். தேவனிடம் இருந்து தாங்கள் பெற்ற நன்மைகளுக்காகவும் விசுவாசிகள் நன்றி கூறி ஜெபிப்பார்களாக.

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied. Download from www.Paul-Timothy.net